★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

the EELANADU

Registered as a Newspaper at the General Post Office
Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 ஆவணி 11 ஷவ்வா 3 இதழ் 196
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 27-8-79

## ஹவானா மாநாடு நாளை ஆரம்பம்

(ஹவானா)

நடுநிலைமை நாடுகளின் உச்சி மகாநாடு நாளை கியூபா தலைநகர் ஹவானாவில் ஆரம்பமாகிறது.

இம்மகாநாட்டில் கலந்து கொள்ளும் தலைவர்களின் பாதுகாப்புக் கருதி சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக நேற்றிரவு இங்கு அறிவிக்கப்பட்டது.

பலதேச அதிபர்களின் பாதுகாப்பு நலன்கருதி 150 தனித் தனி விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

நாளை ஆரம்பமாகும் ஹவானா மகாநாட்டில் பல முக்கிய பிரச்னைகள் அலசி ஆராயப்படவிருப்பதாக மகாநாட்டு வட்டாரங்கள் தெரிவித்தன.



UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1979-8-27
PERIODICALS DIVISION
LIBRARY

# பிரதமர் 'பிரேமா' நாடு திரும்பினர்

## "அரசு அபிவிருத்திக்கு தாராள உதவிகள்"

(கொழும்பு)

ஆறு நாடுகளுக்கான சுற்று விஜயத்தை மேற்கொண்ட பிரதமர் திரு ஆர். பிரேமதாசா, நேற்றிரவு சுமார் 8-30 மணியளவில் தாயகம் திரும்பினார்.

பிரிட்டன், சுவீடன், ஸாம்பியா, கென்யா, சீனு, சிங்கப்பூர், ஆகிய ஆறு நாடுகளுக்கும் உத்தியோகபூர்வமான விஜயத்தை மேற்கொண்டு விட்டு நேற்றிரவு நாடு திரும்பிய பிரதமருக்கு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

கட்டுநாயக்கா முதல் கொழும்பு வரை வீதிகள் பச்சைக் கொடிகளினாலும், தேசியக் கொடிகளினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

விமான நிலையத்தில் பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பிரதமர் பிரேமதாசா பேசுகையில் தமது வெளிநாட்டு சுற்று விஜயம், இலங்கைக்கு பெரும் வெற்றியையும், அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு பிரமாண்டமான வாய்ப்புக்களையும் அளித்திருப்பதாகத் தெரிவித்தார்.

## நிரந்தரமாக்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை

(உடுப்பிட்டி)

விவசாயத் திணைக்களத்தின் கீழ் விவசாயப் போதனாசிரியர் அலுவலகங்களில் பணியாற்றும் சிற்றூழியர்கள் 10 வருட காலமாக நிரந்தரமாக்கப்படாத நிலையில் கஷ்டம் அனுபவித்து வருவதாக காணி விவசாய அமைச்சரிடம் முறையிடப்பட்டுள்ளது.

"பிரஸ்தாப ஊழியர்கள் நியமனம் செய்யப்படும்போது நிலைப் பாதுகாவலர்களாகவே நியமிக்கப்பட்டனர். ஆனால், இவர்கள் பல வருட காலமாக நிரந்தர நியமனம் வழங்கப்படாதிருந்து வருவதுடன், இதர அரசாங்க ஊழியர்கள் அனுபவித்துவரும் புகையிரத ஆணைச்சீட்டு, விடுமுறைகள் முதலிய சலுகைகள் இல்லாது புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்" என்று அமைச்சரிடம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பிரஸ்தாப மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது.

"பிரஸ்தாப சிற்றூழியர்கள் தம்மைத் தொழிலாளர் தரத்திலாவது நியமித்து நிரந்தரமாக்குமாறு கோரியதைத் தொடர்ந்து அதற்கான நேர்முகப்பரீட்சை இவ்வருட ஆரம்பத்தில் நடாத்தப்பட்டிருந்தது ஆனால் இன்றுவரையும் தொழிலாளர் தரத்திலான நிரந்தர நியமனமாவது வழங்கப்படவில்லை. விரைவில் நிரந்தர நியமனம் வழங்கி விமோசனம் அளிக்க வேண்டும்."

(கு)

## நள்ளிரவில் மர்மக்கோஷ்டி நடத்திய 'நாடகம்'!

### புத்தூரில் சம்பவம்; பொலிஸார் வலைவீச்சு!

(யாழ்ப்பாணம்)

நள்ளிரவில், ஆறுபேர் கொண்ட மர்மக்கோஷ்டி யொன்று, தோட்டத்துக்குள் அத்துமீறிச் சென்று கொட்டிலில் ஆழ்ந்த தூக்கத்திலிருந்த தோட்டச் சொந்தக்காரரை தூக்கிச் சென்று மரத்துடன் கட்டி வைத்துவிட்டு, பணம், தளபாடம், தோட்ட உபகரணங்கள் ஆகியவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளது!

இச்சம்பவம் புத்தூர் பகுதியிலுள்ள இறந்தாவிலுள்ள சடையர் என்பவரது தோட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது

தோட்டச் சொந்தக்காரர் சடையர், இச்சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸில் செய்துகொண்ட முறைப்பாட்டையடுத்து கோப்பாய் பொலிஸார், இறந்தாவிற் பகுதியிலுள்ள சண்முகராஜா என்பவரது வீட்டில், ஒப்பாட்டத்துக்குள் களவுபோன பொருட்களில் சிலவற்றை கைப்பற்றினர். வீட்டுச் சொந்தக்காரர் தலைமறைவாகியுள்ளதையடுத்து, அவரைக் கைதுசெய்யும் முயற்சியில் கோப்பாய் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக இறந்தாவில் பகுதியில், பலஇடங்களில் தோட்ட உபகரணங்கள் நீரிறைக்கும் யந்திரங்கள் களவு போவதாக பொலிசாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. இக்களவுகளை இம் மர்மக்கோஷ்டியே நடத்தியிருக்கலாம் என்று கோப்பாய் பொலிஸார் இப்பொழுது கருதுகின்றனர்.

சண்முகராஜாவின் வீட்டில் பல மணிவெட்டிகள், பிக்காஸ்களையும் பதுக்கி வைத்திருந்ததையும் பொலிசார் கண்டுபிடித்துள்ளனர். விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. (கெ)

### வீதிகள் திருத்த நடவடிக்கை

(உடுப்பிட்டி)

நெல்லியடிப் பட்டினசபைப் பகுதி வீதிகளை திருத்தி புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை நெல்லியடி பட்டின சபை விசேட ஆணையாளர் திரு பி எம். ஜோசப் துரிதமாக மேற்கொண்டுவருகின்றார்

இவ் வீதிகள் புனரமைப்புக்கென பகுப்பாய்வுப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 1,75,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது (க)

### என். எம். மறைவு பேரிழப்பு!

(யாழ்ப்பாணம்)

"கலாநிதி என். எம். பெரேராவின் மறைவு எமது தொழிலாளருக்கு பெரும் இழப்பை அளித்துள்ளது. யாழ். மாவட்டத்தில் கள்ளிறக்கும் தொழிலாளர் சமாசத்தை ஏற்படுத்தியதும், தேசிய சேமிப்பு வங்கியை ஆரம்பித்து வைத்ததும் பெருமைதரும் சாதனை என்றே கூறவேண்டும். இவ்விதமாக மறுமலர்ச்சியை ஏற்படுத்திய தலைவருக்கு சங்கத்தின் சார்பில் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்".

இவ்வாறு கோரும் தீர்மானம் யாழ். மக்கள் துறைமுகத்தொழிலாளர் பொதுச் சேவைக்கூட்டுறவுச்சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது

சங்கத்தலைவர் திரு. ஜே எம். இராசு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு!

"யாழ். மாவட்டத்தின் புதிய அரசாங்க அதிபராக பதவியேற்ற திரு. யோகேந்திரா துரைசுவாமிக்கு சகலங்களுக்கும் உண்மையாகவும், உறுதியாகவும் ஒத்துழைப்பு நல்கி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவமுன்வர வேண்டுமென்று எமது சங்கம்

[6 பக்கம் பார்க்க]

## டாக்டர்களின் விடுதிக்கு ரூ. 120 லட்சம் ஒதுக்கீடு!

(கொழும்பு)

அரசாங்கம் டாக்டர்களின் விடுதிவசதிகளை அதிகரிப்பதற்காக, இவ்வாண்டு 120 லட்ச ரூபாவை ஒதுக்கியுள்ளது.

நாடுபூராகவும் இந்நிதியிலைக் கொண்டு மணமாகிய டாக்டர்களுக்கும் மணமாகாத டாக்டர்களுக்குமென இருபது விடுதிகள் நிறுவப்படும்.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் செய்து கொண்ட முறைப்பாட்டையடுத்து அரசு இந்நிதியை ஒதுக்கியுள்ளது. (கெ)



## இன்று திறப்பு விழா

அன்புடையீர்!

மங்களகரமான சித்தார்த்தி வருடம் ஆவணி மாதம் 11-ந் திகதி (27-8-79) திங்கட்கிழமை மு. ப. 10.00 மணிக்கு ஆஸ்பத்திரி வீதி இரண்டாவது நவீன சந்தை 141-ம் இலக்கத்தில் அமைந்திருக்கும் (சுபாஸ் கபே முன்பாக)

எமது

### ஸ்ரீசாயி ஸ்ரோர்ஸ்

என்னும் ஸ்தாபனத்தை

யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர்

திரு. இராசா விசுவநாதன் ச. நீ. உ. நீ.

அவர்கள் திறந்து வைப்பார்கள்.

அத்தருணம் அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவரும் வந்து விழாவை சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் வேண்டுகின்றோம்

ஸ்ரீசாயி ஸ்ரோர்ஸ் இங்ஙனம்
11, 12, நவீன சந்தை, யாழ்ப்பாணம். ஸ்ரீசாயி ஸ்ரோர்
தொலைபேசி: 660 (3394) உரிமையாளர்

# "யாழ். நகர் இந்திரபுரியாக 4 ஆண்டுகளேனும் தேவை"

## நவீனசந்தை திறப்பு விழாவில் மேயர்

(யாழ்ப்பாணம்)

"ரோமாபுரி எப்படி ஒரே நாளில் கட்டப்படவில்லையோ, அதுபோன்று யாழ் நகரை இந்திரபுரியாக கட்டி எழுப்புவதற்கு 4 ஆண்டுகளேனும் பிடிக்கும். நன்கு திட்டமிட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டால் சோர்வு இல்லாது ஓய்வு எடுக்காது வேலைகள் நடந்தால் அது நடந்தே தீரும். அதற்கு மக்கள் அனைவரது ஒத்துழைப்பும் தேவை"

யாழ். நவீன மார்க்கட் புதிய கட்டிடத்தை நேற்று திறந்து வைத்துப்பேசிய யாழ் நகர முதல்வர் திரு. ஆர். விஸ்வநாதன் மேற்கண்டவாறு கூறினர்

திரு. விஸ்வநாதன் மேலும் கூறியதாவது:

"தற்போது நான் திறந்து வைத்த இந்தக்கட்டிடமானது பதவிக்காலத்தில் ஏற்பட்டதல்ல இதனைக்கட்டி முடித்த பெருமை காலஞ்சென்ற முதல்வர் திரு வாளர்கள் துரையப்பா, முன்னுள் மாநகரசபை விசேட ஆணையாளர்களாக இருந்த சட்டத்தரணி வி நடராசா, இளைப்பாறிய முன்னுள் அரசாங்க அதிபர் திரு. ஏ. ஜோசப் மற்றும் தற்போதைய மாநகர ஆணையாளர் திரு. க. சிவஞானம் ஆகியோரையே சாரும். யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் முதல்வராக இக்காலகட்டத்தில் நான் இருக்கின்ற ஒரே காரணத்தினால் அதனைத் திறந்துவைக்கும் பேறு தமிழர்விடுதலைக்கூட்டணியின் சார்பில் எனக்குக் கிடைத்துள்ளது.

"யாழ்ப்பாண நகரின் அபிவிருத்திக்கு முழுமையான திட்டம் ஒன்று இருக்கவேண்டும். அப்படி ஒரு திட்டம் இருந்தால்தான் நகரைத் திட்டமிட்டு அபிவிருத்திசெய்ய முடியும். இவ்வபிவிருத்தித் திட்டம் நீண்டகாலத்திட்டம், குறுகிய காலத்திட்டம் என்ற அடிப்படையில் அமைக்கப்படும். மாநகரசபை, நகருக்கு என்ன செய்தது? என்று கேட்காமல் நான் நகருக்கு என்ன செய்தேன் என்று ஒவ்வொருவரும் தம்மையே கேட்க வேண்டும்.

"யாழ். நகரின் குளங்களை ஆழமாக்கல், வடிகால் அமைப்புத்திட்டம், கழிவுப் பொருள் அகற்றும் திட்டம் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட ஒரு குறுகிய காலத்திட்டமொன்றை நாம் அமைக்க இருக்கின்றோம். இது விடயத்தில் சம்பந்தப்பட்ட துறைகளில் நிபுணர்களாக இருக்கக்கூடிய தமிழர்கள் ஆலோசனைகளைக் கூறித்திட்டங்கள் தீட்டுவதற்கு ஆயத்தமாக முன்வந்திருப்பதை இன்று உங்கள் மத்தியில் பெருமையோடு கூறிக்கொள்கின்றேன். பூர்வாங்கத்திட்டம் பூர்த்தியானவுடன் நான் அதனைப் பொதுமக்களுக்கு அறிவிப்பேன்.

"சபைநிர்வாகத்தின் பெரும்பகுதி தமிழிலேயே நடைபெற்று வருகின்றது. மேலும் நீங்கள் சபையுடன் தொடர்பு கொள்ளும்போது தமிழிலேயே தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

"கொழும்புத்துறை, நாவாந்துறை-போன்ற பகுதிகளிலுள்ள வீதிகளுக்குத் தார் போடும் வேலை ஆரம்பமாகிவிட்டது. போதியளவு தார் கிடைக்காததினால் காலதாமதமானது. மேலும் மின்சாரத்தைப் பொறுத்தவரையிலும் போதியளவு உபகரணங்கள் எம்மிடம் இல்லை. ஆயினும் அது விடயமாக நான் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகின்றேன்.

"அடுத்து நகர மண்டபத்திலுள்ள படமாளிகை விடயம். அப்படமாளிகை 1975ம் ஆண்டுடன் நிறுத்தப்பட்டிருக்க வேண்டியது ஒன்று. ஆயினும் அவர்கள் அன்றிலிருந்து சட்டவிரோதமாக இருந்துவருகின்றனர். நாம் அவர்களை இம்மாதம் 10ம் திகதியுடன் வெளியேறும்படி கூறியிருந்தும் அவர்கள் வெளியேறவில்லை. எனவே நான் தற்போது அவர்களை வெளியேற்றவேண்டிய சட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளேன். நகரமண்டபம் கட்டப்பட்டது பொதுமக்களின் தேவைக்கே ஒழிய, படமாளிகை நடாத்துவதற்கு அல்ல.

மற்றும் யாழ். மாநகரசபை அபிவிருத்தி பற்றி வரியிறுப்பாளர்கள் ஏதாவது ஆக்கபூர்வமான யோசனை கூறினால் அவை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்." [ɪ]

# பொன்னாலை வரதராசப் பெருமாள் ஆலய மகிமை

ஈழத்தின் வடமுனையிலிருக்கும் பொன்னாலையத்தில் எழுந்தருளியிருக்கும் வரதராசப் பெருமாளின் வரலாறு அற்புதங்கள் நிறைந்த ஒன்றாகும். சுவர்ணாலயம், சதுரங்கம் என்றும் இப்புனிதமிகு பொன்னாலயம் அழைக்கப்படுகிறது.

முன்னொரு காலத்தில் துர்வாசமுனிவர் இந்திரன்மீது இட்ட சாபத்தினால் இந்திரன் விசனமடைந்து, இதனின்றும் விமோசனம் பெறும்பொருட்டு அம்முனிவரையே வணங்கித் துதிசெய்தான். இது கண்டு மனமிரங்கிய துர்வாச முனிவர் இந்திரனைநோக்கி, "நீவிர் ஈழத்தில் பொன்னாலயம் எனும் வாரிதி மீனவனாகப் பிறப்பீர். வாசுதேவர் கூர்மாவதாரம் செய்ய அதை நீர் வலைவீசிப்பிடிப்பீர். உமது உடல் ஆவ்வாமையில் பட்டவுடன் நானிட்ட சாபம் உம்மைவிட்டு நீங்கும்" என்றார்.

பொன்னாலையத்தின் வலைஞர்களில் ஒருவனாக வளர்ந்த இந்திரன் வீசியவலையில் ஒருநாள் ஆமையொன்று அகப்பட்டது. அயலிலுள்ளோர் உதவியுடன் அவ்வாமை கரைசேர்க்கப்பட்டபொழுது, அவ்வலைஞனின் உடல் அவ்வாமையைத் தீண்டியவுடனே மாபெரும் அற்புதமொன்று நிகழ்ந்தது. அவ்வாமை கல்லாய் மாறிய அதேசமயத்தில் வானில் பொன் விமானமொன்று தோன்றியது. மீனவ வடிவிலிருந்த இந்திரனும் சுய உருவம் பெற்றுத் தனது விமானத்தைச் சென்றடைந்தான். அங்கிருந்த மீதிப்பேரும் இக்காணற்கரிய காட்சியைக் கண்டு மெய்சிலிர்த்து பலவாறு சந்தோசமடைந்தனர். கிருஷ்ணனின் கூர்மாவதாரமே கல்லாய் மாறிய ஆமை என சந்தேகமின்றி உணர்ந்து ஸ்ரீ இராமனின் நாமங்களை உச்சாடனஞ்செய்தனர். அவ்விடத்திலேயே விஷ்ணு ஆலயமொன்றை அமைக்கத்தீர்மானித்தனர். வைணவ ஆகமமுறைப்படி கட்டப்பெற்று, "வரதராசப் பெருமாள்" எனத் திருநாமமிடப்பட்ட இப்புதுமைமிகு கோவிலின் கர்ப்பக் கிரகத்திற்கு அண்மையில் கல்லாய்ச் சமைந்த அவ்வாமை இன்றும் காணப்படுகின்றது

இவ்வாறு சரித்திரப்புகழ் பெற்ற இத் திருத்தலத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் இனிதே ஆரம்பமாகின்றது.

வரதராசப் பெருமாள் கோவிலின் இன்னொரு சிறப்பு அம்சமும் ஈண்டு குறிப்பிடத்தக்கதொன்றாகும். இத்தலத்தின் வடக்குவீதியில் 1971ம் ஆண்டு மஹாவிஷ்ணுவின் அனந்தசயன மூர்த்தி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. பிரமா திருமாலின் நாபிக்கமலத்தினின்றும் தோன்றிய ஐதிகம் இத்திரு உருவில் அமைக்கப்பட்டுள்ளது. அழகு சொட்டும் ஒரு காட்சியாகும். தேர்த் திருவிழாவன்று அலங்காரம் செய்யப்பட்ட எம்பெருமானின் திருக்கோலத்தைக் காணக் கண் கோடி வேண்டாமோ?

தாயும் தந்தையுமாக, கல்வியும் செல்வமுமாக, நண்பனும் சுற்றமுமாக, எல்லாமுமாகவும் இருப்பவனும், இராமனாகவும் கிருஷ்ணனாகவும் திருஅவதாரம் செய்தவனும், பாஞ்சாலியின் துகில் உரியப்பட்டபோது அவளால் பக்தியுடன் கூவியழைக்கப்பட்டபோது அவள் மானத்தைக் காத்தவனும் கோபியர் வாயுபகவானின் அட்டகாசத்தினால் அல்லலுற்றபோது கோவர்த்தனகிரியை ஒரு விரலிற்தாங்கி காத்த கண்ணனை, கிரிதரனை, கோவிந்தனைத் துதிசெய்து, அவனது நாமத்தை எந்நேரமும் ஜெபித்துக் கொண்டு அவன் திருவருளை என்றென்றும் பெறுவோமாக.

—எஸ். எஸ். ஜெயரட்ணம்

## மன்னாரில் நீர் விநியோகம்

### நெதர்லாந்து உதவும்

(கொழும்பு)

மன்னார் நீர்விநியோகத்திட்டத்திற்கு நெதர்லாந்து அரசு நிதிஉதவி வழங்கவுள்ளது.

இத்திட்டம்பற்றி ஆராய நெதர்லாந்து அரசின் விசேட ஆலோசகர் ஒருவர் இங்கு வருவார்.

மன்னார் மக்களுக்கு இப்போது நாள் ஒன்றுக்கு ஒரு லட்சத்து 26 ஆயிரம் கலன் நீர் நாளாந்தம் தேவைப்படுகிறது. (இ)

# மல்வில் கிருஷ்ணன் கோவில்

காத்தற்கடவுளாம் கண்ணபிரான் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களுள் இயக்கச்சியிலிருந்து வடமேற்கே ஒன்றரை மைல் தொலைவில் மல்வில் என்னும் பதியில் வெண்மணற் பரப்பும், தாமரைத்தடாகமும் மந்தைகள் மேய்ந்திடும் சோலையும் அமைந்துள்ள சூழலிலே எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் பழம் பெரும் தலம் ஒன்றுண்டு.

இவ்வாலயத்தில் இன்று கொடியேற்றத்திருவிழா நடைபெறுகிறது. அடுத்த மாதம் 5ம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், 6ம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட எம்பெருமான் ஆழியவானக்கடலில் தீர்த்தமாடும்காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்: இந்நாளில் இச்சூழலிலுள்ள கிராமங்கள் யாவும் புனிதமுற்றிருக்கும். தெருவெங்கும் பூரண கும்பம் வைத்து கண்ணனை வணங்கி மெய்யுருகி நிற்பர்.

நாமும், மந்தைகள் மேய்த்திடும் கோவிந்தனை, பார்த்தனுக்குச் சாரதியான பார்த்த சாரதியை, பக்திவலையில் அகப்படும் பரந்தாமனை, நாடி நேர்க்கு இன்பந்தரும் நாராயணனை, சீதையை அருளிச் செய்த தாமோதரனை, மண்ணை உண்ட மாயவனை, பாண்டவர் துயர் தீர்த்த கேசவனை, நச்சுப் பாம்பு மீதிலே நடனமாடும் மாயவனை, கார்மேக வண்ணனை, மழைக்கு நல்ல குடையென மலைபிடித்த கண்ணனை உண்மை அன்புடன் வழிபட்டு அவனடி சேர்வோமாக.

—ந. தாமோதரம்பிள்ளை

## மக்கள் கருத்து

### முரசுமோட்டையில் தபால் பெட்டி இல்லை

பரந்தனையடுத்துள்ள முரசுமோட்டையில் தபால்போடுவதற்கு மக்கள் ஒருமைல் தூரத்திற்கு மேல் நடந்து தபால்கந்தோருக்குப் போகவேண்டியிருக்கிறது இங்கு தபால் போடுவதே பெரிய வேலையாகத் தோன்றுகிறது இவ்விடத்தில் தபால்பெட்டி மூன்று மாதங்களுக்கு மேலாக இல்லாமல் இருக்கிறது கேட்டால் முன்னர் இங்கிருந்த தபால்பெட்டி திருத்த அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறுகின்றார்கள். முரசுமோட்டை உபதபால்கந்தோரில்-முரசுமோட்டைப்பகுதியில் - நவஜீவன சந்தியில் ஆகியவற்றில் இருக்கும் தபால்பெட்டிகளும் 3ம்கட்டையில் இருக்கும் தபால்பெட்டியும் இல்லை இவ்வளவு காலமாகத் தபால்பெட்டி திருத்தப்படவில்லையா? இதையிட்டு மேலிடம் கவனம் எடுத்து மக்களின் குறையை நீக்குமென நம்புகின்றோம்.

மூ. வாமதேவன்
முரசுமோட்டை
பரந்தன்.

## மீண்டும் நியமனம்

[நீர்வேலி]

நீர்வேலி திரு. செல்லப்பா நடராசா மீண்டும் சமாதான நீதிபதியாக நீதியமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரித் தலைமையாசிரியராக முப்பத்தைந்தாண்டுகள் நற்பணி புரிந்து இளைப்பாறிய இவர், நீர்வேலி கிராமஅபிவிருத்திச் சங்கத் தலைவராகவும் தொண்டாற்றி வருகிறார். ஒரு சிறந்தகூட்டுறவாளராகிய இவர், பொதுநலத் தொண்டுகளில் முன்னின்று உழைப்பவர்.

யாழ் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு. ஜே ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் இவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார், முன்னைய அரசாங்க காலத்திலும் சமாதான நீதிபதியாக நியமனம் பெற்றிருந்தார். [ஏ]

## ஆசிரிய இடமாற்ற விண்ணப்ப முடிவுதிகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களின் வருடாந்த இடமாற்றத்துக்கான விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 31ந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது

விண்ணப்பமுடிவுதிகதி இம்மாதம் 10ந் திகதியாக இருந்த போதிலும், அண்மையில் கல்வி அமைச்சின் உதவிச்செயலாளர் திரு. கருணாரத்னவை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுகோஷ்டியினர் சந்தித்து கடந்த இரண்டு வருடங்களாக இடமாற்றங்கள் ஒழுங்கானமுறையில் நடைபெறவில்லை என்றும் 1980 ஜனவரி மாதம் தொடக்கம் நடைபெறும் வருடாந்த இடமாற்றங்கள் பற்றிய சுற்றுநிருபங்கள் உரியகாலத்தில் கிடைக்காததால் குறிப்பிட்ட காலத்திற்குள் ஆசிரியர்கள் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கமுடியவில்லை என்பதனையும் சுட்டிக்காட்டியதனை அடுத்தே திரு. கருணாரத்ன காலநீடிப்புப்பற்றி தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு ஆசிரியர்களுடைய கஷ்டங்களை நீக்கக் கூடியமுறையில் இடமாற்றங்களை செய்யப்போவதாக திரு. கருணாரத்ன கூறினார்.

4ம், 4ம்தர அதிபர்கள் நேர்முகப்பரீட்சைக்கு கொழும்பு மாவட்ட ஆசிரியர்கள் அழைக்கப்படவில்லை என்பது குறித்தும் இந்தமாத முடிவில் கல்வி டிப்ளோமாபரீட்சையைமுடித்துக்கொண்டு வெளியேறும் 28 தமிழ் ஆசிரியர்கள் பற்றியும் தூதுக்குழுவினர் எடுத்துக்கூறினர்.

தூதுக்குழுவினர் சமர்ப்பித்த கோரிக்கைகள் வருமாறு:

டிப்ளோமா பரீட்சைஎடுத்த ஆசிரியர்கள் சம்பந்தமாக 5 அல்லது 6 வருடங்கள் கஷ்டப் பிரதேச சேவையை முடித்தவர்களுக்கும் திருமணமாகாத பெண்களுக்கும் சொந்த மாவட்டங்களில் நியமனம் வழங்கவேண்டும்.

திருமணம் செய்த பெண்களுக்கு கணவன்மார் வேலை செய்கின்ற இடத்தில் அல்லது சொந்த இடத்தில் நியமனம் வழங்கவேண்டும்.

3 வருடங்கள் வெளியூர் சேவைசெய்தவர்களை வவுனியா, மன்னார் போன்ற மாவட்டங்களில் நியமிக்க வேண்டும்.

வெளிமாவட்ட சேவை இல்லாதவர்களை மலையகப் பாடசாலைகளுக்கு நியமிக்கவேண்டும்.

[4-ம் பக்கம் பார்க்க]

மத்திய அமைச்சர்கள்

# பாலாபழனூர், சத்தியவாணிமுத்துவுக்கு சென்னையில் வரவேற்பு!

சென்னை, ஆக. 26 இந்திய மத்திய அமைச்சரவைப்பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட அ.இ.அ.தி.மு.க. வைச்சேர்ந்த திரு. பாலாபழனூர், திருமதி சத்தியவாணி முத்து ஆகியோர் நேற்று தமிழகம் வந்தனர்.

அமைச்சரவைப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட பின் னர் முதல்தடவையாக தமிழகம் வந்த இவர்களை விமான நிலையத்தில் தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனுடன் மாநில அமைச்சர்களும் ஆதரவாளர்களும் எம். எல். ஏ.க்களும் வரவேற்றனர்.

# "விசேஷ நீதிமன்றங்களை எதிர்ப்பதில் மாற்றமில்லை"

சென்னை, ஆக. 26 "இந்தியாவில் அவசரகால நிலை அமுலிலிருந்தபோது நடைபெற்றதாகக்கூறப்படும் அத்துமீறியசெயல்பற்றி விசாரிப்பதற்கென நியமிக்கப்பட்டுள்ள விசேஷ நீதிமன்றங்களை எதிர்ப்பது என்ற அ.இ.அ.தி.மு.க. முடிவில் எந்தமாறுதலுக்கும் இடமில்லை" என்று மத்தியரசாயன, பெற்றோலிய அமைச்சர் திரு. பாலாபழனூர் தெரிவித்தார்.

அமைச்சரவைப்பொறுப்பை ஏற்றுக்கொண்டபின்னர் முதல் தடவையாக நேற்று தமிழகம் வந்த திரு. பாலாபழனூர் நிருபர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

"காபந்துஅரசிலிருந்து அ.இ.அ.தி.மு.க. தனதுஇரு அமைச்சர்களையும் வெளியேற்றும் என்ற செய்தி விஷமத்தனமானது. 'ஜனதா-எஸ்' உடனான உறவை அ.இ.அ.தி.மு.க. ஒருபோதும் முறித்துக்கொள்ளாது என்றும் அடுத்த தேர்தலிலும் 'ஜனதா-எஸ்' காங்கிரஸ் கூட்டணியுடன்இணைந்தேபோட்டியிடும் என்றும் திரு. பாலாபழனூர் தெரிவித்தார். (கு)

இரு சமூகத்தவரிடையேமோதல்

# அ.தி.மு.க. முன்னாள்எம்.பி. உட்பட 69 பேர் கைது!

சென்னை, ஆக. 26 தர்மபுரிக்கு அருகில் பாலக்கோடு என்னும் கிராமத்தில் இரு சமூகத்தவரிடையே ஏற்பட்ட மோதலில் இருவர் மாண்டனர் என்றும் கலவரத்தை அடக்க பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் மேலும் இருவர்மரணமானார்கள் என்றும் தெரியவருகிறது.

பாலக்கோட்டில் தலித் ஒன்றினூடே நடைவைப்பது தொடர்பாக இருசமூகத்தவரிடையே ஏற்பட்ட மோதலில் 50 குடிசைகளுக்குத் தீ வைக்கப்பட்டதுடன் 2 பேர் மரணமானார்கள். கலவரத்தைஅடக்க பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தபோது இருவர் மரணமானதுடன் 5 பேர் பலத்த காயங்களுக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இக்கலவரம் தொடர்பாக பொலிசார் மேலும் 69 பேரைக் கைதுசெய்துள்ளனர். அவர்களில் அ.இ.அ.தி.மு.க.வின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. பெரியசாமியும் ஒருவராவார்.

இக்கலவரம் தொடர்பாக தி.மு.க. தலைவர் திரு மு. கருணாநிதி கருத்துத்தெரிவிக்கையில் "அரசின் அசிரத்தைதான் நால்வரின் மரணத்துக்குக் காரணம். உடனடியாக தமிழக அரசு இவ்விடயத்தில் தலையிட்டு அங்கு சகஜநிலையை ஏற்படுத்தவேண்டும்" என்று தெரிவித்துள்ளார். [கு]

## வேலுமணி காலமானார்

சென்னை, ஆக 26 தென் இந்திய தமிழ்திரைப் படத்தயாரிப்பாளரும் இயக்குநருமாகிய கலைமாமணி ஜி. என். வேலுமணி சென்னையில் மாரடைப்பால் காலமானார். பதிபக்தி, பாலும் பழமும் ஆகிய படங்களை இவர் தயாரித்து வெளியிட்டிருந்தார். (இ)

## சிவாலயம் இடம்மாறுகிறது

சென்னை, ஆக 26 ஆந்திரப்பிரதேசத்திலுள்ள 779 ஆண்டுகள் பழமைவாய்ந்த சிவன் கோவில் ஒன்றை 15 மைலுக்கு அப்பால் உள்ள ஓரிடத்திற்கு மாற்றிக்கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

புதியாக அணைக்கட்டு ஒன்று அமைக்கப்பட்டதை அடுத்தது இக்கோயில்நீரினுல் சேதமடையும் என எதிர்பார்க்கப்படுவதாலேயே இது இடமாற்றம் செய்யப்படுகிறது. (இ)

## வாழ்வாங்கு வாழ்ந்தவர்



நீர்வேலி வடக்கில் புகழ்பூத்தகுடியிற் கனகசபை தம்பதிகளின் புதல்வனாக மலர்ந்து நன்மணம் வீசி 26-7-79ல் உதிர்ந்துவிட்ட அமரர் வல்லிபுரம் வையாதன் வாழ்வாங்கு வாழ்ந்த ஒருவர் ஆவர் கல்வி அறிவு, நல்லொழுக்கம், நிதானப்பேச்சு, நேரான போக்கு கடமை உணர்ச்சி, பணிவான நடைஉடை, ஜீவகாருண்யத் தன்மை அனைத்தும் ஒருங்கே இவர், ஒரு சைவசபிமானியும் கூட!

நீர்வேலியில் சுடர்விட்டெரிந்து அகிலஇலங்கை எங்கும் ஒளிவீசி நிற்கும் நீர்வேலி காமாட்சியம்பாள் ஐக்கிய கைத்தொழிற்சங்கத்தின் மூலமையானராக இருபத்தைந்தாண்டுகள் தொடர்ந்து பணியாற்றி எல்லார் உள்ளத்திலும் இடம்பெற்றவர். நீர்வேலியில் உயர்ந்து விளங்கும் காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தின் உயர்ச்சியில் முன்னின்று உழைத்தவர் நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலயபரிபாலகர்களில் ஒருவராகவும். காமாட்சியம்பாள் இந்துபரிபாலனசபையின்தலைவராகவும் பணியாற்றியவர்.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெறுக.

-- த. சின்னராசா

## ஆசிரிய...

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

யாழ் மாவட்டம் தவிர்ந்த ஏனையமாவட்டங்களை சொந்த இடமாகக் கொண்டவர்களுக்கு அதே மாவட்டங்களில் நியமனம் கொடுக்கவேண்டும்.

இக்கோரிக்கைகளை அக்கறையோடு கேட்டறிந்த உதவிச் செயலாளர் திரு. கருணரத்ன இவ்விடயம் சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினர்.

இத்தூதுக்குழுவில் இ. த. ஆசிரியர் சங்கத்தலைவர் திரு டி. எஸ். கே. வணசிங்க, பொதுச் செயலாளர் திரு. த. சிவம், நிதிச் செயலாளர் திரு நா. நடராசா நிர்வாகச் செயலாளர் நா. சோதிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். [கா-கு]

## இன்றைய பலன்

ஆவணி மாதம் 11ம் திகதி திங்கட்கிழமை [27-8-1979]

மேடம்: பகைமையான சம்பவங்கள் நடைபெறும். களஸ்திரவழியால் நன்மைகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை தென்படும். சாதுவானின் சஞ்சரிப்பவர்களுக்கு களிவான நிகழ்ச்சிகள் உண்டு.

இடபம்: செய்தொழிலில் தளர்ச்சி ஏற்படும் சதிசெய்வதற்கு சகாக்களே சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பர். பிரயாணத்தைத் தவிர்க்கவும் இறை நம்பிக்கை நன்று.

மிதுனம்: இதமான வாழ்வு இன்சொல் பெரியோர்கள் ஆதரவு இத்தனையும் இன்று தப்பாமல் கிட்டும் இறைபக்தி மேலோங்கும்.

கடகம்: வணிகர்களுக்கு வியாபார விருத்திக்கு இடமுண்டு புதிய முயற்சிகள் இன்று கைகூடும் செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும்.

சிங்கம்: பண வருவாயில் நல்ல திருப்பம் ஏற்படும் விருந்தினர்களின் வருகை மகிழ்ச்சியைத்தரும், சிலர் உல்லாசப் பயணம் ஒன்றுக்கும் திட்டமிடுவார்கள் புத்திரர்களால் பெருமைக்கும் இடமுண்டு.

கன்னி: உறவு முறைகளில் நல்ல முன்னேற்றம் காணப்படும். அபிப்பிராயபேதங்கள் மறைவதற்கும் இடமுண்டு பயனுள்ள கடிதமொன்று இன்று உங்களுக்கும் கிடைக்கலாம்.

துலாம்: நெருங்கிய நண்பர் ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம் பிள்ளையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படும் எதிலும் அவசரகோலத்தைத் தவிர்த்துக் கொள்ளவும்.

விருட்சம்: நிதியில் நல்ல அபிவிருத்தி காணப்படுகின்றது. நீண்டநாள் கடன் தொல்லை இன்று நிவர்த்தியாகும் கணவன் மனைவி உறவு முறைகள் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும் சுபதினம்.

தனு: பேராசையின் மூலம் குறுக்குவழியை நாடுவீர்கள், இதனால் விபரீதங்கள் தோன்றக்கூடும், மறைமுக எதிர்ப்புக்களைச் சமாளிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம், முன்னெச்சரிக்கை நன்று

மகரம்: தெய்வநம்பிக்கையில் அதிகஆர்வம் பிறக்கும் புண்ணிய தலயாத்திரையொன்றும் மேற்கொள்ளப்படலாம் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் தென்படுகின்றது உற்சாகமான தினம்

கும்பம்: திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும், அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர்.

மீனம்: ஆலய வேலைத்திலக்காரியங்கள் நடைபெறும் பகைவர்களின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும் காணித்தொல்லையிலும் கடன்பட நேரிடலாம் குடும்பத்தில் நிலைக்கால பிரிவுக்கும் இடமுண்டு.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## நாவலர் நோக்கம்நிறைவேற அங்கீகாரம்பெற்றசபைதேவை

### பண்டிதமணி கருத்து

[யாழ்ப்பாணம்]

"நாவலர் சம்பாத்தியம்நாவலர் நோக்கத்துக்குப்பயன்படவேண்டும். புத்தகம் கடைநிலம் என்பனவே நாவலர் சம்பாத்தியம். நாவலர்-நோக்கமும் சம்பாத்தியமும் பயன்படுவதற்கு அரசாங்க அங்கீகாரம் பெற்ற ஒருசபை தோன்ற வேண்டும்."

யாழ் றிம்மர் மண்டபத்தில், கலாநிதி எச். டபிள்யு தம்பையா தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கிற்கு கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை மேற்கண்ட செய்தியை அனுப்பிவைத்தார்.

பண்டிதமணியின் செய்தியை பண்டிதமணி நூல் வெளியீட்டுச்சபையின் காரியதரிசி திரு அ. பஞ்சாட்சரம் சபையில் சமர்ப்பித்து விளக்கினார்.

அச்செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அதிகாரம் உள்ள சபை தோன்றுமாயின் பெருந்தொகைச் சம்பாத்தியத்தைக் கொண்டிருப்பதாக நாவலர் வித்தியாசாலையை நடத்தும் அதிகாரம் மேற்படி சபைக்கு வரும், அதுபற்றி உறுதி உண்டு. இக்குறிப்பிட்டவை பற்றிய விபரமான விளக்கம் ஆறுமுகநாவலர் என்ற புத்தகத்தில் நாவலர்வித்தியாசாலை பற்றிய கட்டுரையில் உண்டு.

நாவலர் நோக்கங்களில் மிக மிக முக்கியமான ஐந்தாண்டுத் திட்டம் ஒழுக்கம், விவேகம், ஆரோக்கியம் உள்ளவர்ந்த மாணவர்களைச் சேர்த்து ஐந்து வருடப் பயிற்சி கொடுத்து கற்றவர்களை உபாத்தியாயர்களையும், சமயப்பிரசாரகர்களையும் ஆக்குவது இத்திட்டம், இத்திட்டம் இக்கால நிலைக்கேற்ப கல்வி, சமயம், கோயில் நிலைகளை நோக்கிச் சிந்திக்கத்தக்கது. ஐந்தாண்டுத் திட்ட விசேட விளக்கம் ஆறுமுக நாவலர் என்ற புத்தகத்தில் இரண்டாம் கட்டுரையில் உண்டு என்கின்றார்.

## இன்று

கண்ணை ஸ்ரீ செந்தில் கதிர்வேலாயுதசுவாமிகோவில் மண்டலாபிஷேக விழாவின் 13வது நாளான இன்று பிற்பகல் 5-30 மணிக்கு சாயங்காலப் பூசையும், அதனைத் தொடர்ந்து 'நாம மகிமை' என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ இ. சுப்பிரமணிய சாஸ்திரிகளின் சொற்பொழிவும் இடம்பெறும், மாலை 6-30மணிக்கு வசந்தமண்டபப்பூஜை நடைபெற்று சுவாமி உள்வீதி வருதலும் நடைபெறும் (கொ)

# "யோகக் கலையை தமிழ்மக்கள் புறக்கணிக்கக் கூடாது"

## யாழ். வரவேற்பில் யோகிராஜ்

[யாழ்ப்பாணம்]

"எமது பாரம்பரியத்தை எடுத்தியம்பும் கலையான யோகக்கலையை எம்மின மக்கள் புறக்கணித்துவிட்டார்கள். வேற்நாட்டவர்கள் ஆர்வத்துடனும், பக்தியுடனும் கற்றுவருவதோடு அக்கலையை தங்களின் பிரச்சாரங்கள் மூலம் வளர்த்தும் வருகின்றனர். யோகக் கலையை நாங்கள் புறக்கணிப்பது வருந்தத்தக்க விஷயமாகும்."

நல்லூர் திவ்ய ஜீவன சங்க யோகிராஜ் சச்சிதானந்த சுவாமிஜிக்கு யாழ்ப்பாணம் பதில் நீதவான் திரு. எஸ். சண்முகநாதன் தலைமையில் சங்க மண்டபத்தில் அளித்த வரவேற்பு விழாவில் சுவாமிஜி பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

அமெரிக்காவில் இருதய நோயினால் பாதிக்கப்பட்ட 12 பேருக்கு மருத்துவ முறை மூலம் எவ்வளவோ முயன்றும் குணப்படுத்த முடியாமல் வைத்திய அதிகாரிகள் இந்த யோகக்கலை மூலம் அவர்களுக்கு சிகிச்சை அளித்துக் குணப்படுத்தியிருந்தது. இக்கலையின் சிறப்புக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

"மனித சக்தியினால் மட்டும் ஒரு உயிரைக் காப்பாற்றி விட முடியாது தெய்வ அனுக்கிரகமும் வேண்டும். நியான அடிப்படையில் இப்பணியை செய்து வரவேண்டும். மதவேறுபாடுகளைக் களைந்து சகலரும் சமமாகவும், சகோதரத்துவத்துடனும் வாழ இந்தக்கலை மூலம் வலியுறுத்தலாம்."

[கா]

---

### குழந்தைகளின் உளவளர்ச்சியுடன்

# உடல் வளர்ச்சியையும் பேணவேண்டும்

[உடுப்பிட்டி]

ஒரு நாட்டின் வளர்ச்சி அந்த நாட்டின் பிரஜைகளின் கைகளிலேயே தங்கியுள்ளது. இதனாலேயே இன்றைய குழந்தைகளை எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக உருவாக்குவதில் அரசாங்கங்கள் தீவிரகவனம் செலுத்தி வருகின்றன. எமது பெரியோர்களின் நல்வழியில் இட்டுச் சென்று அவர்களைக் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிக்கவர்களாக உருவாக்க வேண்டும்.

இவ்வாறு வதிரி தமிழ் மன்ற பாலர் பாடசாலையின் 10-வது ஆண்டு பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் சட்டவேலி-நெல்லியடிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க உபதலைவர் திரு ந. பாஸ்கரன் குறிப்பிட்டார்.

திரு ஆ. இரத்தினசபாபதி தலைமையில் நடைபெற்ற இப் பரிசளிப்பு விழாவில் திரு பாஸ்கரன் தொடர்ந்து பேசுகையில் குழந்தைகளின் உளவளர்ச்சியை மட்டுமல்ல உடல் வளர்ச்சியையும் பேண வேண்டியது அவசியமென்றார்.

திரு செ. சதானந்தன், செல்வி தீபமலர் தர்மராஜா ஆகியோரும் பேசினர். திருமதி இந்திராணி பாஸ்கரன் பரிசுகளை வழங்கினார். [க]

---

### பிறந்த உடனேயே

# சிசுவின் தலை வெட்டப்பட்டு புதைக்கப்பட்டதா?

[யாழ்ப்பாணம்]

கிணற்றில் கண்டெடுக்கப்பட்ட சிசுவின் தலை, வைத்திய பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நாரந்தனை வடக்கில் ஒரு கிணற்றில் தலை கிணற்றில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டதும் இச் சிசுவின் தாயையும், சிசுவின் உடலையும் கண்டுபிடிப்பதில் ஊர்காவற்றுறைப் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளதும் தெரிந்ததே.

குறிப்பிட்ட இடத்திற்கு விளையாடச் சென்ற இருவர்கள், அங்குள்ள கிணற்றில் பனங்காய் கிடப்பதாக நினைத்து கல் எறிந்தபோது பனங்காய்க்குப் பதிலாக ஒரு தலை இருப்பது தெரிந்ததாம். இதனைத் தொடர்ந்து நாரந்தனை வடக்கு கிராம சேவகர் திரு. சுந்தரலிங்கத்திற்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஊர்காவற்றுறைப் பொலிசாருக்கு அறிவிக்கப்பட்டது.

ஸ்தலத்திற்குச் சென்ற பொலிசார் சிசுவின் தலையை கிணற்றில் இருந்து வெளியே எடுத்தபோது சிசுவின் தலை அழுகிய நிலையில் காணப்பட்டது.

பிறந்த அன்றே குழந்தையின் தலையை வெட்டி நிலத்தில் புதைத்திருக்கலாமென்றும், நாய் அத்தலையைக் கிடங்கிலிருந்து கிளறி எடுத்திருக்கலாமெனவும் பின்னர் எவ்விதமாகவோ கிணற்றுக்குள் வீசப்பட்டிருக்கலாம் என்றும் பொலிசார் சந்தேகின்றனர்; சிசுவின் உடலையும், தலையையும் பொலிசார் தேடிவருகின்றனர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. [கொ]

---


## மக்கினென் டிரவல் சேவிஸ் (இலங்கை) லிமிட்டெட்

## Mackinnon Travel Service (Ceylon) Ltd

தங்களது இன ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில் 8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் திறவி இயங்கி வருகிறது:

இங்கு

- உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
- கற்றுலாக்கள்
- பாஸ்போட்
- விசா

இப்படி எல்லாவசதிகளையும் கொழும்புக்கு செல்லாமலே ஒழுங்கு செய்துகொள்ளலாம்;

உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்;

### மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்,

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 8154

பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!


---

## திருட்டு

[கோண்டாவில்]

கடை ஒன்றின் யன்னல் கம்பியை உடைத்து உட்புகுந்த திருடர்கள் கடையில் வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் 500 ரூபா ரொக்கப் பணத்தையும் 500 ரூபா பெறுமதியான பொருட்களையும் திருடிச் சென்றுள்ளனர்.

கோக்குவிலிலுள்ள கடை ஒன்றில் நடைபெற்ற இத் திருட்டுத் தொடர்பாக மேற்படி கடையின் உரிமையாளரான இராசநாஜயா ஆனைக்கோட்டை பொலிஸில் செய்துள்ள முறைப்பாட்டில் தனது கடையில் சனிக்கிழமை இரவு களவு நடைபெற்றிருப்பதாக தெரிவித்துள்ளார். ஆனைக்கோட்டைப் பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். [கு]

---

## என். எம்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாராட்டுத் தெரிவிக்கிறது

"யாழ் மாவட்ட கூட்டுறவுத் துறைமுகசேவை சமாசப் பொறுப்பிலிருந்த உணவுக் கப்பல் இறக்குமதிவேலையைத் தனிப்பட்ட ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டதன் நிமித்தம் 1500 தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை இழந்துள்ளனர். மேலும் இது விடயமாக யாழ். மாவட்ட அமைச்சரையும், அரசாங்க அதிபரையும் இதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்கள் பேட்டிகாண வேண்டும்."

---


## மரண அறிவித்தல்

### பூதப்பிள்ளை சிற்றம்பலம்

கருகம்பனையைச் சேர்ந்த பூ. சிற்றம்பலம் காலமானார், இவர் அன்னலட்சுமியின் அருமைக் கணவரும், பத்மநாதன் (சமுர்த்தொழிற் சேவைத் திணைக்களம், வவுனியா), சரோஜினி குமாரசாமி, இந்திரா யோகநாதன் (சாம்பியா), கீதா பராசசிங்கம், நிர்மலா பரஞ்சோதி, இராதா பாலசுப்பிரமணியம், புவனு நில்லைநடேசன் (பொலிக்ளினிக், கொழும்பு), மகேந்திரநாதன் (சாம்பியா), மகேந்திரராணி கமலநாதன் (சாம்பியா) ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கருகம்பனை இல்லத்திலிருந்து 27-8-79 (இன்று) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் தகனக்கிரியைக்காக கீரிமலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 3419


---

# ஆசிய நாடுகளின் 6-வது சட்டமாநாடு

[கொழும்பு]

ஆசிய நாடுகளின் ஆறுவது சட்ட மகாநாடு இன்று ஆரம்பமாகிறது.

பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இம்மகாநாட்டை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆரம்பித்து வைப்பார்.

இம்மகாநாட்டில் முக்கிய பல சர்வதேச சட்டப்பிரச்னைகள் எழுப்பப்படலாம் என்றும், பிலிப்பைன்ஸ் நாட்டு பிரதிநிதி முக்கிய உரை நிகழ்த்துவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

### சமைத்துக்கொண்டிருந்தபோது

# சேலையில் நெருப்புப்பற்றி இளம்மனைவி மரணம்

[யாழ்ப்பாணம்]

தீக்காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இளம் மனைவி நேற்று முன்தினம் மரணமானார்.

இவரது மரணவிசாரணை யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்றபோது மரணமானவரின் கணவர் நாகேந்திரன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"எனது மனைவி பூமணி ஆனைக்கோட்டையில் உள்ள எங்கள் வீட்டில் சமைத்துக் கொண்டிருந்தபோது அடுப்பில் இருந்து நெருப்பு திடீரென அவரது சேலை மீது பற்றி எரிந்தது, அவ்விடத்தில் நின்ற நான் மண்ணை அள்ளிக் கொட்டியும் சாக்கால் மூடியும் நெருப்பை மேலும் பரவ விடாமல் அணைத்துவிட்டு மனைவியை யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதித்தேன். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த எனது மனைவி இறந்துவிட்டதாக நேற்று முன்தினம் செய்தி கிடைத்தது."

ஆனைக்கோட்டைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர்செய்தனர். பதில் மரணவிசாரணை அதிகாரி திரு எஸ் அமிர்தலிங்கம் விபத்து மரணமெனத் தீர்ப்பு வழங்கினர். [கொ]

---

## இந்தப்பொருள் உங்களுடையதா?

[யாழ்ப்பாணம்]

ஆண்கள் அணியும் விலையுயர்ந்த உடைகள் சில அடங்கிய பேப்பர் பை ஒன்று யாழ் ஆஸ்பத்திரியில் கண்டெடுக்கப்பட்டது. இப் பொருட்களின் உரிமையாளர் யாழ் ஆஸ்பத்திரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு பொருட்களைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ் ஆஸ்பத்திரிப் பொலிசார் தெரிவித்துள்ளனர். [கொ]

---


## ST. JOHN'S COLLEGE & CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA.

### ADMISSION – 1980.

1. Vacancies (St. John's College) only in the following Grades: One, Four, Six, and Nine
2. Vacancies (Chundikuli Girls' College) only in Grade One
3. Children born between 1/2/74 and 31/1/75 will only be considered for admission to Grade one.
4. Pupils to be considered for admission to Grades Four, Six & Nine should be below the age of ten, twelve and fifteen respectively.
5. Apply before 15th September on forms available from the respective Schools from the 1st of September 1979.
6. Please send stamped addressed long envelope and Postal Order for Rs. 2/- per form
7. Admission Test (for Grade Four, Six and Nine Only) at 8-30 a.m. on Saturday 13th October 1979.
8. Scholarships available for pupils who do exceptionally well at the admission test

PRINCIPALS.

8312


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No. 49. Telegeram Eelanadu, T.Phon: 389.